# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை , கிண்டி, சென்னை–600032
தொலைபேசி:044–22201337
மின்னஞ்சல் முகவரி:ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032,
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 028/2015/பேரூராட்சி

ஆணை எண்: 102/2016

நாள்: 31/ 05 /2016

திரு.ஆ.பெருமாள்.
காவல் சார்பு ஆய்வாளர் (ஓய்வு),
3.1.34.C, பாண்டியன் நகர்,
தே.கல்லுப்பட்டி, பேரையூர் வட்டம்,
மதுரை மாவட்டம் – 625 702

மனுதாரர்

செயல் அலுவலர்,
தே.கல்லுப்பட்டி பேரூராட்சி,
தே,கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம்.

எதிர் மனுதாரர்

திரு ஆ, பெருமாள் சார்பு ஆய்வாளர் (ஓய்வு) தே, கல்லுப்பட்டி, பேரையூர் வட்டம் , மதுரை மாவட்டம் என்பவரது 25.04.2015 நாளிட்ட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் 2014–ன் படியான முறையீடு 29.04.2015 அன்று முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு எண்.0028/2015 ஆக பதிவு செய்யப்பட்டது, மேற்படி முறையீடு தொடர்பாக உரிய ஆவணங்கள், விசாரணைகள் மற்றும் வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு இம் முறைமன்ற நடுவத்தால் ஆணையிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாவட்டம், தே, கல்லுப்பட்டியைச் சார்ந்த திரு ஆ, பெருமாள், சார்பு ஆய்வாளர் (ஓய்வு) என்பவரது 25.04.2015 நாளிட்ட மனு முறையாக முறைமன்றத்திற்கு முகவரியிட்டு விதிகளின் படியும்

தகுந்த ஆதாரங்களுடனும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே இதனை குறிப்பிட்டு முறைமன்றத்திற்கு முகவரியிட்டு தகுந்த ஆதாரங்களுடன் மனு செய்திடுமாறு மனுதாரருக்கு இம்முறைமன்ற அறிவிப்பு ந.க.எண்.0028/2015 நாள்.07.05.2015–ன் மூலம் தெரிவிக்கப்பட்டது. ஆனால், மனுதாரர் தன்னுடைய 28.05.2015 நாளிட்ட கடிதத்தில் தனது 25.04.2015 நாளிட்ட மேதகு ஆளுநருக்கு முகவரியிட்ட கடித நகல் மற்றும் 06.12.2014 நாளிட்ட மனுவில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் / ஆவணங்கள் அடிப்படையில் விசாரிக்குமாறு தொவித்துள்ளார். இவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் 2014 மற்றும் விதிகளின் படி முறையாக மனு செய்யவில்லை. இருப்பினும், 25.04.2015 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தால் 29.04.2015 அன்று மனு எண் 0028 ஆக பதிவு செய்யப்பட்டது. மேலும் இம் மனுவுடன் இணைக்கப்பட்டிருந்த 06.12.2014 நாளிட்ட பிறிதொரு மனுவிலும் இதேநிலைதான் உள்ளது.

2. மனுதாரரது 25.04.2015 நாளிட்ட மனுவில், தான், தே. கல்லுப்பட்டி பேரூராட்சியின் செயல் அலுவலர் திருமதி. அ.கலையரசி என்பவர் அரசு நிதியை முறைகேடாக பயன்படுத்தி சுமார் 3 கோடி அளவில் வருமானத்திற்கு அதிகமாக சொத்து குவித்துள்ளது சம்பந்தமாக தக்க நடவடிக்கை எடுக்க கோரி 06.12.2014 நாளிட்ட மனு ஒன்றினை மேதகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி வைத்ததாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி புகார் மனு மேதகு ஆளுநர் அலுவலகத்திலிருந்து தக்க நடவடிக்கைக்காக அரசுச் செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அவர்களுக்கு 12.12.2014 நாளிட்ட கடிதப்படி அனுப்பப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் 10.03.2015 நாளிட்ட கடிதத்தில் மனுதாரரது புகார்களில் குறிப்பிட்டுள்ள குற்றம் சாட்டப்பட்டவர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையைச் சேர்ந்தவர் என்பதால் மேற்படி மனுக்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். பின்னர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையிலிருந்து வரப்பெற்ற 07.04.2015 நாளிட்ட கடிதத்தில் மனுதாரரது 06.12.2014 நாளிட்ட மனுவானது ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறைக்கு வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், தனது 06.12.2014 நாளிட்ட மனுவினை அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 13.04.2015 கடிதத்தில் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தனது 06.12.2014 நாளிட்ட மனுவில் குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டுகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கடந்த இரண்டரை வருடமாக மாவட்ட நிர்வாகம், பேரூராட்சி இயக்ககம், மாநில தகவல்

ஆணையம், மாநில லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறை இயக்குநர் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்து துறைகளிடமும் மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கும் மனு அனுப்பியும் நடவடிக்கை இல்லை என்றும் ஒரு பேரூராட்சி செயல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்காமல் ஒட்டு மொத்த துறை அதிகாரிகளும் குற்றம் சாட்டப்பட்டவரிடம் கையூட்டு பெற்றுக் கொண்டு குற்றம் சாட்டப்பட்டவரைக் காப்பாற்றுவது மிகவும் வேடிக்கையானது என்றும் தனது 06.12.2014 நாளிட்ட மனுவை காணவில்லை என்று பதில் அளித்துள்ளதும் சந்தேகத்திற்குள்ளாகியுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார். ஓர் ஓய்வு பெற்ற அரசு அலுவலர் அனைத்து அரசு அலுவலர்கள் மீதும் ஒட்டுமொத்தமாக ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் கூறுவது சற்று பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்றாய் உள்ளது.

3 மனுதாரருக்கு தக்க பதில் இம்முறைமன்றத்தின் 07.05.2015 நாளிட்ட கடிதத்தில் அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் 25.04.2015 கடிதத்துடன் மனுதாரரது 06.12.2014 நாளிட்ட மனுவும் இணைக்கப்பட்டிருந்தமையால் அதன் சாராம்சங்கள் மற்றும் கோரிக்கைகள் இம்முறைமன்ற நடுவத்தால் நன்கு பரிசீலிக்கப்பட்டன. இக்கடிதத்தில் மதுரை மாவட்டம் தே.கல்லுப்பட்டி பேரூராட்சியில் 01.04.2008 முதல் 21.01.2010 வரை பணிபுரிந்த செயல் அலுவலர் திருமதி.அ.கலையரசி என்பவர் பேரூராட்சி நிர்வாகத்திற்கு அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட நிதியை முறைகேடாக பயன்படுத்தி சுமார் 3 கோடி அளவில் தன்னுடைய வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளதாகவும் அவருக்குப் பின் மேற்படி பேரூராட்சியில் பணிபுரிந்த செயல் அலுவலர் திரு.கா.கண்ணன் என்பவரும் முறைகேடுகள் செய்து வருவதாகவும் குறிப்பிட்டு இவ்விருவர் மீதும் 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டத்தின் படி விசாரணை செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது,ஆனால், குறிப்பான ஆதாரத்துடன் கூடிய விவரங்கள் இக்கடிதத்தில் வழங்கப்படாமல் தான் ஏற்கெனவே மதுரை மாவட்ட லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு துறைக்கும் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவருக்கும் அனுப்பி வைத்த குற்றச்சாட்டுக்கள் அடங்கிய கடிதங்கள் குறித்தும், சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணை மனு மற்றும் நீதி மன்ற ஆணை குறித்தும், தனது தகவல் அறியும் உரிமை சட்ட மனுக்கள் குறித்தும் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரது விசாரணை மற்றும் இறுதி ஆணைகள் குறித்தும் அதன் மீதான தனது அதிருப்தியையும்

குறிப்பிட்டுள்ளார். மேலும், எதிர் மனுதாரரான திருமதி. அ.கலையரசி அவர்களுக்கு தக்க தண்டனை உத்தரவிடுமாறும் தனது 26.06.2013 நாளிட்ட மனு மீது வழக்கு பதிவு செய்ய மாநில லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறைக்கு உத்தரவிடுமாறும் கோரியுள்ளார். மனுதாரர் எழுப்பிய குறிப்பான குற்றச்சாட்டுகளையும் அவைகள் குறித்து துறை ரீதியான விதிகளின் படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் பரிசீலித்திட இம்முறை மன்ற நடுவத்தால் முடிவெடுக்கப்பட்டது.

4. அதன்படி மனுதாரரது 20.06.2011 நாளிட்ட மதுரை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு முகவரியிடப்பட்ட குறிப்பான குற்றச்சாட்டுகள் அடங்கிய புகார் மனு பரிசீலிக்கப்பட்டது. மேலும் மனுதாரர் குறிப்பிட்ட தனது நீதி பேராணை எண்416/2012– ன் மீதான சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையின் 18.01.2012 நாளிட்ட ஆணையின் நகலும் பெறப்பட்டது. நீதிமன்ற ஆணையின் எடு பிரதி பின்வருமாறு,

## ORDER

"Considering the limited prayer made in this writ petition for a Writ of Mandamus directing respondents-1 to 3 to take appropriate action against the 4th and 5th respondents on the basis of the petitioner's representation dated 27.04.2011, this writ petition stands disposed of, directing the first respondent to look into the grievance of the petitioner and pass appropriate orders, within a period of six weeks from the date of receipt of a copy of this order.

The writ petition stands disposed of accordingly. No costs.

Sd/..

(C.V.J) (R.K.J) 18.01.2012"

மேற்படி வழக்கில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர், உதவி இயக்குநர் பேரூராட்சிகள், மதுரை துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறை, மதுரை, திருமதி.அ.கலையரசி முன்னாள் செயல் அலுவலர் தே.கல்லுப்பட்டி மற்றும் கே.கருமலையன், முன்னாள் தே.கல்லுப்பட்டி பேரூராட்சித் தலைவர் ஆகியோர் முறையே 1 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். மேற்படி நீதிமன்ற ஆணையில் மனுதாரரின் 27.04.2011 நாளிட்ட முறையீட்டின் அடிப்படையில் தக்க நடவடிக்கைகள் எடுக்குமாறும் தக்க ஆணைகள் பிறப்பிக்குமாறும் ஆணையிடப்பட்டுள்ளது,

5. அப்போதைய மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நடவடிக்கைகள் ந.க.எண்.84302/2011/பேரூராட்சி2 நாள்.02.02.2012–ல் நீதிமன்ற ஆணைகளுக்கிணங்க மனுதாரரின் புகார் மனுவின் மீது முதற்கட்ட விசாரணை செய்யும் பொருட்டு மதுரை மாவட்ட கலால் மற்றும் ஆயத்தீர்வை துறையின் உதவி ஆணையரை விசாரணை அலுவலராக நியமித்து ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி விசாரணை அலுவலர் தனது விசாரணை அறிக்கையினை (நே.மு.க.ந.க.எண்.9034/12/மது 5 நாள்.28.03.2012) 29.03.2012 அன்று மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சமர்ப்பித்துள்ளார்.

இது குறித்தான தொடர் நடவடிக்கைகளின் விவரங்களை பரிசீலித்திட ஏதுவாக அனைத்து ஆவணங்களும் கோரப்பட்டதோடு மட்டுமின்றி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவச் சட்டம் 2014–ல் பிரிவு 8–ன் படி உதவி இயக்குநர் பேரூராட்சிகள் மதுரை அவர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பெற இம்முறைமன்றத்தால் முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்பட்டு அழைப்பாணை (0028/2015–5 நாள்.08.09.2015) அனுப்பப்பட்டது.

6. இதனிடையே மனுதாரரிடமிருந்து வரப்பெற்ற 28.05.2015 நாளிட்ட கடிதத்தில் தனது 06.12.2014 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து விசாரித்து உண்மை இருக்கும் பட்சத்தில் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

7 இம்முறை மன்ற நடுவத்தால் முடிவெடுக்கப்பட்டவாறு மனுதாரர் அளித்த புகார்கள் சம்பந்தமாக விசாரிக்கும் பொருட்டு 20.08.2015 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்கள் முன் ஆஜராகுமாறும் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை கோப்புகள் மற்றும் விசாரணை அறிக்கைகளை தாக்கல் செய்யுமாறும் இம்முறை மன்ற நடுவ அழைப்பாணை ந.க.எண்.அ1 /0028/ 15–3 நாள்.07.08.2015–ன் மூலமாக உதவி இயக்குநர் பேரூராட்சிகள் மதுரை கேட்டுக் கொள்ளப்பட்டார். மேற்படி விசாரணை ஒத்தி வைக்கப்பட்டு 18.09.2015 அன்று நடைபெற்றது. இதனிடையே இம்முறை மன்ற நடுவத்தின் கடிதம் ந.க.எண்.அ1 /0028/15–2 நாள்.06.07.2015–ன் வாயிலாக மனுதாரரது மேல் முறையீட்டினைக் குறிப்பிட்டு திருமதி.கலையரசி மீது தொடுக்கப்பட்டுள்ள குற்றப் பத்திரிக்கை மற்றும் அது சார்ந்த மூல ஆவணங்களை அனுப்பி வைத்திட மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரை கேட்டுக் கொள்ளப்பட்டது. இக்கடித நகல் மனுதாரருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

8. 18.09.2015 அன்று விசாரணைக்கு ஆஜரான திரு.மா.குணசேகரன், உதவி இயக்குநர் பேரூராட்சி, மதுரை கோரப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்து அளித்த வாக்குமூலம் பின்வருமாறு:-

''திரு.பெருமாள் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடுத்த வழக்கின் படி வழக்கு எண்.WP416/2012 படி வழக்குத் தொடர்ந்து, அதன் அடிப்படையில் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மனுதாரர் கோரிக்கையினை பரிசீலனை செய்து, 18.01.2012 அன்று, ஆறுவார காலத்திற்குள் விசாரணை செய்து, உரிய ஆணை வெளியிடுமாறு தெரிவித்தது. அதனடிப்படையில் விசாரணை அலுவலராக உதவி ஆணையர் (கலால்) அவர்கள் நியமனம் செய்யப்பட்டு , அவரது விசாரணை அறிக்கையின் படி, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆணை எண்.ந.க.எண்.84302/2011/பே2, நாள்.08.01.2013 தேதியில் தமிழ்நாடு குடிமைப்பணிகள் விதி 17(b) குற்றச்சாட்டுகள் திருமதி.கலையரசி மீது சுமத்தப்பட்டு, ஆணை வெளியிடப்பட்டது.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 84302/2011/பே2, நாள்.01.03.2013-ன் படி நிலச்சீர்திருத்த உதவி ஆணையர் அவர்கள், விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டார். விசாரணை அலுவலர் நடத்திய விசாரணை அறிக்கையின் அடிப்பகையில் குற்றம் சுமத்தப்பட்ட திருமதி.கலையரசி மேல் விளக்கம் பெறப்பட்டு, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண்.84302/2011/பே2, நாள்.16.05.2014-ன் படி குற்றம் சாட்டப்பட்ட திருமதி.கலையரசி, குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவித்து ஆணைப்பிறப்பித்தார் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இத்துடன் இணைத்து சமர்ப்பித்துள்ளேன் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. அ.கலையரசி அவர்கள் தற்போது, உதவியாளர் நிலையில் முதல் நிலை பேரூராட்சி செயல் அலுவலராக தே.கல்லுப்பட்டி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து வருகிறார். இவர், 02.04.1986 முதல் அரசுப் பணியில் பதிவுறு எழுத்தராக, கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டவர் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மனுதாரர் பணியிலிருந்து ஓய்வுப் பெற்ற பின்பு தே.கல்லுப்பட்டியில் குடியிருந்து

வருகிறார். அவருடைய சொந்த ஊர் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த தே.கல்லுப்பட்டி என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், மனுதாரர் தனது சொந்த ஊரில், வீட்டிற்கு சாலை அமைக்க வேண்டுமென தே.கல்லுப்பட்டி நிர்வாக அலுவலராக பணிபுரிந்த திருமதி.அ.கலையரசியிடம் வேண்டுகோள் வைத்துள்ளார். தற்போது மனுதாரர் குறிப்பிட்ட சாலை அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. இந்த சாலை அமைக்க சிறிது காலம் ஏற்பட்டதால் மனுதாரருக்கும் செயல் அலுவலருக்கும் ஏற்பட்ட வாக்குவாதத்தில், தடித்த வார்த்தைகளை உபயோகித்ததால் இதுபோன்ற நிகழ்வு ஏற்பட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மனுதாரர் தொடர்ந்து இதுபோன்ற புகார் மனுக்களை பலத் துறைகளுக்கு அனுப்பும் பழக்கம் உடையவர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள மற்றுமொரு செயல் அலுவலர் திரு.கண்ணன் அவர்களின் மீது குற்றச்சாட்டு சம்பந்தமாக விசாரணை அலுவலர் நடத்திய விசாரணை முடிவுற்று, மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வு குறித்த இறுதி ஆணை வெளியிடும் நிலையில் உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்'' எனக் குறிப்பிட்டார்.

9. இம்முறை மன்ற நடுவத்தால் எடுக்கப்பட்டு வரும் விசாரணை நடவடிக்கைகள் குறித்து அறிவிக்கப்பட்டிருந்தாலும் மனுதாரர் வேண்டுமென்றே மீண்டும் 09.09.2015 நாளிட்ட ஒரு கடிதத்தினை "தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுநிலையாளர் அவசர சட்டம் 2014 மற்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் மேல் முறையீட்டு மனு'' எனக் குறிப்பிட்டு மேதகு தமிழக ஆளுநர் அவர்களது பெயருக்கே முகவரியிட்டு நகலொன்றினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களது பெயருக்கே அனுப்பி வைத்துள்ளனர். அதில் 2 மாதங்களுக்கு மேலாகியும் நடவடிக்கை குறித்து பதில் அனுப்பப்படவில்லையெனவும் தனது மனுக்களில் குறிப்பிட்டது போல் ஊழல் குற்றச்சாட்டிற்கு ஆளான திருமதி.அ.கலையரசியை காப்பாற்றும் நோக்கத்துடன் மாவட்ட நிர்வாகம், பேரூராட்சி நிர்வாகம் தலைமைச் செயலகம் ஆகியவற்றில் பணிபுரியும் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகள் அனைவரும் அவரிடம் கையூட்டு பெற்றுக் கொண்டு நடவடிக்கை எடுக்க மறுப்பதாகவும் இப்படிப்பட்ட சூழ்நிலையில் இயற்றப்பட்டுள்ள தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவ அவசரச் சட்டம் என்பது தேவையற்றது என்பதையே காட்டுவதாகவும் தெரிவித்துள்ளார். இது அவரது வரம்பு மீறிய மற்றும் கண்டனத்துக்குரிய கூற்றாகும்.

10. முதலாவது எதிர்மனுதாரரான <u>திருமதி.கலையரசி,</u> செயல் அலுவலருக்கு போதிய வாய்ப்புகள் வழங்கிட ஏதுவாக அவர் 13.10.2015 அன்று விசாரணைக்கு ஆஜராகி தனது தரப்பிலான வாக்குமூலத்தினையும், ஆதாரங்களையும் சமர்ப்பித்திடுமாறு இம்முறை மன்ற நடுவத்தின் அறிவிப்பு நாள்.30.09.2015–ன் வாயிலாக அறிவுறுத்தப்பட்டது. அதன்படி 13.10.2015 அன்று அவர் இம்முறை மன்ற நடுவத்தின் முன் ஆஜராகி <u>அளித்த வாக்குமூலம் வருமாறு:–</u>

*''திரு.அய்யனார் அவர்களுடைய மகள் அ.கலையரசி, வயது (48) ஆகிய நான் மதுரை மாவட்டம், தே,கல்லுப்பட்டியில் பேரூராட்சி செயல் அலுவலராக பணியாற்றி வருகிறேன். மனுதாரர் திரு.பெருமாள் பற்றி எனக்கு எதுவும் முன்பின் தெரியாது. நான் 2008ஆம் ஆண்டு முதல் தே.கல்லுப்பட்டியில் செயல் அலுவலராக பணியாற்றினேன். மனுதாரர் திரு.பெருமாள் குடியிருந்த தெருவில் சாலை வசதி கோரி 08.02.2010 அன்று மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தார். மறுபடியும் 09.06.2010 மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சாலை வசதி செய்து தர மனு அளித்தார். பேரூராட்சியின் பொதுநிதியிலிருந்து அவர் குறிப்பிட்ட சாலையை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சாலை வசதி கோரிய இடத்தில் அவர் வீடு கட்டியுள்ளார். அது அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவாகும். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் புகார் அளிக்கப்பட்ட இடத்தில் உடனடியாக செம்மண் சாலை அமைத்து மக்கள் நடப்பதற்கும் மற்றும் ஆட்டோவில் செல்ல ஏதுவாக சாலை அமைக்க உத்தரவிட்டார். அதன்படி மண் சாலை அமைத்து அதன் புகைப்பட நகலுடன் மாவட்ட ஆட்சியருக்கு சமர்ப்பித்தேன். அதன் பின்பு வந்த நிர்வாக அலுவலர் சிமெண்ட் சாலையாக மாற்றியமைத்தார். நான் 01.04.2008 முதல் 22.11.2010 முடிய நான் தே.கல்லுப்பட்டியில் பணியாற்றினேன். அப்பொழுது மனுதாரர் என்மீது எந்தவித புகார் மனுவும் தரவில்லை. நான் பேரையூர் நிர்வாக*

அலுவலராக சென்றபின்பு, 27.04.2011 அன்று என் மீது குற்றம் சுமத்தி அனைத்து அதிகாரிகளுக்கும் தொடர்ந்து இதுநாள் வரையிலும் புகார் மனுக்கள் கொடுத்த வண்ணம் உள்ளார். மேலும், மனுதாரர் ஒப்பந்த அடிப்படையில் பணி செய்ய தனக்கு மாதந்தோறும் ரூ30,000/– அல்லது ஏதாவது ஒரு ஒப்பந்த பணியை தனக்கு வழங்குமாறு பேரூராட்சி தலைவர் திரு.கருமலையா அவர்களிடம் வலியுறுத்தி வந்தார். அவர் தர மறுத்ததால் காழ்ப்புணர்ச்சி காரணமாக என் மீது கடந்த 5 ஆண்டுகளாகவே புகார் சுமத்தி வருகிறார்.

நான் மீண்டும் 3 மாதத்திற்கு முன்பு தே.கல்லுப்பட்டிக்கு நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். நான் 22.11.2010 பேரையூர் பேரூராட்சிக்கு செயல் அலுவலராக மாறிச்சென்ற பிறகுதான் 27.04.2011 ல் என் மீது புகார் மனு ஊழல் கண்காணிப்பு துறைக்கு அனுப்பினார். என்னோடு சேர்த்து பேரூராட்சி தலைவர் உட்பட 5 பேர் மீது புகார் மனு அளித்தார். மாவட்ட ஆட்சியர் திரு.சகாயம் அவர்களும் இதே புகாரை விசாரித்தார். திரு.அன்சல் மிஸ்ரா மாவட்ட ஆட்சியராக வந்த பின்புதான் உதவி ஆணையர், கலால் அவர்கள் மேற்படி புகார் சம்பந்தமாக மீண்டும் விசாரணை நடத்தி அதில் 3 குற்றச்சாட்டுகள் குறிப்பிடப்பட்டது. மறுபடியும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சுப்பரமணியம் அவர்கள் நேரடி விசாரணை செய்தார். விசாரணைக்கு பின்பு குற்றச்சாட்டுக்கள் ஏதும் நிரூபிக்கப்படவில்லை எனவும், பேரூராட்சிக்கு எந்த நிதி இழப்பும் ஏற்படவில்லை என ஆணைப்பிறப்பித்தார். மனுதாரர், அதற்கு பிறகு என்மீது நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என ஒவ்வொரு மாவட்ட ஆட்சியருக்கும் புகார் மனு அளித்து வந்துள்ளார். என்னோடு குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட திரு.கண்ணன், (தற்போது செயல்

அலுவலர்–பள்ளத்தூர் பேரூராட்சி) அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு விசாரணை நடந்து வருகிறது. இறுதி ஆணை நிலுவையில் உள்ளது. மனுதாரர் அவர் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பழிவாங்கும் நடவடிக்கையாக உள்ளது. நான் வாங்கிய இண்டிகா கார் துறை அனுமதிப்பெற்று பணிப்பதிவேட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவரால் 2008லிருந்து தேவையற்ற புகார் மனுக்களால் மன உளைச்சலில் உள்ளேன். என் மன உளைச்சலுக்கு காரணமாகவும், என் மீது வீண் பழி சுமத்தியவர் மீது காவல் துறை மூலமாக தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும், நான் பணியாற்றி பேரையூர் பேரூராட்சி, அலங்காநல்லூர் பேரூராட்சி, வெள்ளாளப்பட்டி பேரூராட்சி, தே.கல்லுப்பட்டி போன்ற எந்த இடங்களிலும் நல்ல முறையில் சிறப்பாக பணிபுரிந்து வந்தேன். சிறந்த பேரூராட்சி செயல் அலுவலராக பணியாற்றியதற்காக முதலமைச்சர் அவர்களிடமும் நற்சான்றிதழ் பெற்றுள்ளேன். இத்துடன் எழுத்துப்பூர்வமான என்னுடைய விளக்கத்தினையும் சமர்ப்பிக்கிறேன்'' எனக் குறிப்பிட்டார்.

11. மனுதாரர் எதிர்மனுதாரர் விசாரணைக்கு அழைக்கப்பட்டதை அறிந்து கொண்டு தனது 18.11.2015 நாளிட்ட மற்றொரு கடிதத்தினை “இரண்டாவது மேல்முறையீடு மனு'' எனக் குறிப்பிட்டு மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் பெயருக்கே முகவரியிட்டு நகலினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் அவர்களின் பெயருக்கே முகவரியிட்டு அனுப்பி வைத்துள்ளார். அதில் மீண்டும் முறை மன்ற நடுவச் சட்டம் குறித்து விமர்சித்தும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் அவர்கள் (பெயர் குறிப்பிட்டு) ) விசாரணை செய்து எடுத்த நடவடிக்கை பற்றி உடனடியாக தனக்குத் தெரிவிக்க அறிவுறுத்தும்படி கேட்டுக் கொண்டுள்ளார். எதிர்மனுதாரர் உடனடியாக தண்டிக்கப்பட்டு விட வேண்டுமென்ற அவரது நோக்கம் புலனாவதையே இது தெளிவுபடுத்துகிறது.

12. இதனிடையே மனுதாரருக்கு தனது தரப்பு ஆதாரங்களையும், வாக்குமூலங்களையும் எடுத்துரைக்க ஏதுவாக 30.09.2015 அன்று விசாரணை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் அன்று ஆஜராகாததால் மேலும் சந்தர்ப்பம் வழங்கி 09.12.2015 அன்று மீண்டும் மறு விசாரணை நாளாக நிர்ணயிக்கப்பட்டது. 01.12.2015 அன்று மனுதாரர் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைத்த தனது கடிதத்தில் முறை மன்ற நடுவத்தின் 18.09.2015 நாளிட்ட அறிவிப்பு தனக்கு கிடைக்கப் பெறாததால் தான் 30.09.2015 அன்று விசாரணைக்கு வர இயலவில்லை எனவும் தான் தனது குடும்பத்துடன் 10.12.2015 அன்று திருச்செந்தூர் செல்வதால் தன்னால் 09.12.2015 விசாரணைக்கு வர இயலாத நிலை உள்ளதெனவும் 16.12.2015 அன்று தான் வருவதாகவும் தெரிவித்துள்ளார். மனுதாரரது கோரிக்கை ஏற்கப்பட்டு மேற்படி விசாரணை 28.12.2015 க்கு ஒத்தி வைக்கப்பட்டு இம்முறை மன்ற நடுவத்தால் ஆணையிடப்பட்டது. அதன் படி மனுதாரர் இம்முறை மன்ற நடுவத்தின்முன் 28.12.2015 அன்று ஆஜராகி கீழ்க்கண்டவாறான தனது தரப்பிலான வாக்குமூலத்தினை தாக்கல் செய்தார்.

> ''*திருமதி.கலையரசி, நிர்வாகஅலுவலர், தே,கல்லுப்பட்டி அவர்கள் மீது என்னால் முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனு சமர்ப்பிக்கப்பட்டது. மனுவின் தொடர்ச்சியாக கீழ்கண்டவற்றை என்னுடைய வாக்குமூலமாக தெரிவித்துக் கொள்கிறேன்.*
>
> *என்னுடைய மனுவில் திருமதி. கலையரசி மீது கீழ்கண்ட குற்றச்சாட்டுக்களை குறிப்பிடுகிறேன்.*
>
> *27.04.2011 தேதியிட்ட ஊழல் குற்றச்சாட்டு மற்றும் வருமானத்திற்கு அதிகமான சொத்து சேர்த்தது சம்பந்தமான மனுவை மதுரை மாவட்ட ஊழல் தடுப்பு கண்காணிப்புத்துறை துணைக் கண்காணிப்பாளர் அவர்களுக்கு சமர்ப்பித்தேன். மேற்படி மனுவின் மீது எந்தவித விசாரணையோ, நடவடிக்கையோ எடுக்கப்படவில்லை. எனவே, மேற்படி குற்றச்சாட்டு அடங்கிய மனுவினை 20.06.2011 நாளிட்ட கடிதத்தை குறைதீர்க்கும் நாளில் மாவட்ட ஆட்சியரிடம்*

மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக ஜனவரி 2012–ல் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு ஒன்றையும் தாக்கல் செய்தேன். அந்த மனு மீது விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க அப்போதைய மாவட்ட ஆட்சியருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. (நாள்.12.01.2012) ஆட்சியர் அவர்கள் விசாரணை செய்து 4 குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கபட்டுள்ளதாக நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தார். அது சம்பந்தமாக குற்றம் சாட்டப்பட்ட திருமதி.கலையரசியிடம் காரணம் கூறும் அறிவிப்பு அனுப்ப கோரப்பட்டது. அதற்குரிய ஆதார நகல் இத்துடன் சமர்ப்பித்துள்ளேன். அதற்கு பிறகு மாவட்ட ஆட்சியர், திருமதி. கலையரசியிடம் நீண்ட நாட்கள் காரணம் கூறும் அறிவிப்பிற்கு பதில் அளிக்காமல் காலம் தாழ்த்தப்பட்டது. இந்நிலையில் மாவட்ட ஆட்சியர் பணி மாறுதலில் சென்றுவிட்டார்.

பின்பு வந்த மாவட்ட ஆட்சியரிடம் அதே குற்றச்சாட்டை குறிப்பிட்டு முறையீடு செய்தேன். மாவட்ட ஆட்சியர் 08.01.2013 நாளிட்ட குற்றச்சாட்டுக் குறிப்பாணையில் கலையரசியின் மீது விதி 17–B யின் கீழ் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு அதற்கு விளக்கம் கேட்கப்பட்டது. அந்த குற்றச்சாட்டுகளுக்கும் திருமதி.கலையரசி பதில் அளிக்கவில்லை. அந்த மாவட்ட ஆட்சியரும் பணி மாறுதலில் சென்றுவிட்டதால் தற்போதுள்ள மாவட்ட ஆட்சியரிடம் மீண்டும் குற்றச்சாட்டுக்கள் அடங்கிய மனுவை முறையீடு செய்தேன்.

அதன்பிறகு தற்போதைய ஆட்சியரிடம் திருமதி.கலையரசி (கு,சா.அ) அவர்கள் குற்றச்சாட்டுகளுக்கு சம்பந்தமில்லாதவற்றை அறிக்கையாக சமர்ப்பித்தார். அவ்வறிக்கையின் மீது குற்றச்சாட்டுகள்

தள்ளுபடி செய்து இறுதியாணை பிறப்பிக்கப்பட்டது. இறுதியாணை இட்ட நாள் (16.05.2014) மாவட்ட ஆட்சியரிடமிருந்து எனக்கு பதில் வரவில்லை. பேரூராட்சியினுடைய இயக்குநரிடமிருந்து 17.06.2014 அன்று எனது இது குறித்து பதில் வந்தது. அதனுடைய நகல் இத்துடன் இணைத்துள்ளேன். ஏற்கனவே என்னால் மனு அனுப்பப்பட்ட ஊழல் மற்றும் கண்காணிப்பு மற்றும் 3 மாவட்ட ஆட்சியர்கள் ஆகியோர் என் மனு மீது நடவடிக்கை ஏதும் எடுக்காததால் உள்ளாட்சி அமைப்புகளுடைய முறைமன்ற நடுவம் என்ற அமைப்பு புதிதாக உருவாக்கப்பட்டதால் மீண்டும் முறைமன்ற நடுவத்திற்கு மனு செய்துள்ளேன். உரிய விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய மனு சம்பந்தமாக இன்று முறைமன்ற நடுவத்தில் கீழ்காணும் ஆவணங்களை என்னுடைய மனுவிற்கு வலு சேர்க்கும் வகையில் ஆதாரமாக இத்துடன் சமா்ப்பிக்கிறேன். மாவட்ட ஊழல் தடுப்பு கண்காணிப்பு துணைக் கண்காணிப்பாளர் அவர்களுக்கு நான் அனுப்பிய மனுவின் நகல் இல்லை. ஆனால் அதே மனுவைத் தான் மாவட்ட ஆட்சியருக்கு அளித்தேன்''. வாக்குமூலத்தின் போது நேரில் சமா்ப்பித்த ஆவணங்கள்.

1. 20.06.2011 நாளிட்ட மாவட்ட ஆட்சியர், மதுரை அவர்களுக்கு அளிக்கப்பட்ட மனு நகல்
2. 23.05.2013 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த அறிக்கை
3. உதவி ஆணையர் (கலால்) அவர்கள் குற்றம் சாட்டப்பட்ட திருமதி.கலையரசி அவர்களின் அறிக்கையை மாவட்ட ஆட்சியருக்கு சமா்ப்பித்த விவரம்
4. குற்றம் சாட்டப்பட்ட அலுவலருக்கு விதி17பி யின் கீழ் சாா்பு செய்யப்பட்ட நாள்.29.05.2013.

5 26.06.2013 அன்று என்னால் இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறைக்கு அனுப்பப்பட்ட கடிதம்.

6. பேரூராட்சி இயக்குநர் அலுவலகத்திலிருந்து 17.06.2014 அன்று எனக்கு அனுப்பிய கடித நகல்.

மேலே கண்ட ஆவண நகல்களை என்னுடைய உள்ளாட்சி முறைமன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பித்த மனுவில் உள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

13. மனுதாரரின் மேற்படி வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் மீது தன்னால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக 16.05.2014 அன்று மாவட்ட ஆட்சித் தலைவரால் இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டதெனவும்., இது குறித்து பேரூராட்சிகளின் இயக்குநரிடமிருந்து 17.06.2014 அன்று தனக்கு பதில் வந்ததெனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் அவர்களின் பெயருக்கே முகவரியிட்டு 07.01.2016 நாளிட்ட தனது கடிதத்துடன் கீழ்க்கண்ட ஆவணங்களின் நகல்களை அனுப்பி வைத்துள்ளார்.

1. சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை நீதிமன்ற உத்தரவின் பேரில் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் மதுரை மாவட்ட உதவி ஆணையர் கலால் மற்றும் ஆயத்தீர்வை அவர்களுக்கு உத்தரவிட்ட 02.02.2012 தேதியிட்ட உத்தரவின் நகல்

2. மதுரை மாவட்ட உதவி ஆணையர் கலால் மற்றும் ஆயத்தீர்வை அலுவலக ந.க.எண். 9034/2012 மது5 நாள். 28.03.2012 ஆம் தேதியிட்ட அறிக்கையின் நகல்.

3. மாவட்ட ஆட்சியர் அவர்கள் ந.க.எண்.84302/2011/பே2 நாள்.23.05.2012–ந் தேதியிட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை பதிவாளர் அவர்களுக்கு அனுப்பிய அறிக்கையின் நகல்.

4. மதுரை மாவட்ட கலால் மற்றும் ஆயத்தீர்வை உதவி ஆணையர் அவர்களின் 28.03.2012 தேதியிட்ட அறிக்கையின் நகல்.

5. மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக ந.க.எண்.84302/2011/பே2 நாள்.08.01.2013 தேதியிட்ட திருமதி.கலையரசி மீது (செயல் அலுவலர்) சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு குறிப்பாணையின் நகல்.

6. மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அலுவலக ந.க.எண்.84302/2011/பே2 நாள்16.05.2014 ஆம் தேதியிட்ட திருமதி.அ.கலையரசியிடம் குற்றச்சாட்டு சம்மந்தமாக விளக்கம் பெற்று அதன் பிரகாரம் எடுத்த நடவடிக்கையின் அறிக்கை நகல்.

7. மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இல.சுப்பிரமணியன் இ.ஆ.ப., அவர்களுக்கு அனுப்பிய மனுக்கள் முறையே நாள். 02.12.2013 , 08.02.2014 மற்றும் 19.05.2014

8. மாநில தகவல் ஆணையர் இவர்களுக்கு அனுப்பிய மனுக்கள் முறையே நாள். 30.01.2014 மற்றும் 03.04.2014

14) இப்பொருள் தொடர்பான அனைத்து ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டன. தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதி–17–ன் கீழ் எதிர்மனுதாரர் திருமதி.கலையரசி, செயல் அலுவலர், தே.கல்லுப்பட்டி மீது மனுதாரரால் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளில் நான்கு குற்றச்சாட்டுகள் நிரூபணமாவதாக விசாரணை அலுவலரால் அளிக்கப்பட்ட அறிக்கை நகல் முறையாக குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட்டு அவரின் கூடுதல் விளக்கங்கள் பெறப்பட்டு மேல்முறையீட்டு அலுவலரான மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நேரடி விசாரணையும் நடத்தப்பட்டு இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது நடவடிக்கைகள் ந.க.எண்.84302 /2011/பே2 நாள்.16.05.2014ன் படி மேல் முறையீட்டு அலுவலரால், விசாரணை அலுவலரால் கணிக்கப்பட்ட நான்கு குற்றச்சாட்டுகள் குறித்தும் விதிகளின் படி கூடுதல் விளக்கங்கள் பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் நேரடி விசாரணைக்குப் பின்னர் கீழ்க்கண்டவாறான இறுதி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

<u>மாவட்ட ஆட்சித் தலைவரின் கணிப்பு</u>

1. ''தே.கல்லுப்பட்டி பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் திருமதி. அ.கலையரசி மீது சுமத்தப்பட்டுள்ள இக்குற்றச்சாட்டு அவரது விளக்கம், விசாரணை அதிகாரியின் அறிக்கை, நேரடி விசாரணையின்பொழுது குற்றம் சாட்டப்பட்டவரால் வழங்கப்பட்ட விளக்கம் ஆகியவை கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. சொர்ண ஜெயந்தி திட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ள வடிகால் கட்டும் பணி தனிப்பட்ட நபரின் தேவைக்காக கட்டப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதற்கான தனியரின் விளக்கத்தில் பணியானது முறைப்படி பேரூராட்சியின் மன்றக் கூட்டத்தில் தீர்மானம் இயற்றப்பட்டு பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அனுமதி பெற்றே பணி செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளார். மேலும் பணி நிறைவடைந்து சுமார் 11 மாதங்கள் கடந்து தான் வேறு பேரூராட்சிக்கு பணி மாறுதலில் சென்றபின் திரு.பெருமாள் என்பவரால் புகார் மனு அளிக்கப்பட்டதன் பேரில் குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். தனியரின் விளக்கம் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் செய்யப்பட்ட பணி முறையாக பேரூராட்சியின் மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அனுமதி பெறப்பட்ட பின்னரே செய்யப்பட்டுள்ளது என தெரியவருகிறது. மேலும் புகார் மனு பணி நிறைவடைந்து சுமார் 11

மாதங்கள் கடந்த நிலையில் அளிக்கப்பட்டுள்ளதால் உள் நோக்கம் உள்ளதாக சந்தேகிக்க தோன்றுகிறது. பணிகள் முறையாக செய்யப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட பின்னரே தொகை வழங்கப்பட்டுள்ளது. எனவே இதில் எவ்விதமான உள்நோக்கம் இருந்துள்ளதாக அனுமானிக்க இயலவில்லை. எனவே குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்படுகிறார்.

2. காலியிடத்தை வாடகைக்கு விடுவது குறித்து முறையான மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அறிவிப்பு வெளியிடப்பட்டு அதன் பின்னரே வாடகைக்கு விட்டதாக தெரிய வருகிறது. மேலும் முன் பணம் மற்றும் வாடகை முறையாக பெறப்பட்டுள்ளது. எனவே காலியிடத்தை வாடகைக்கு விடப்பட்டதில் விதிமீறல்கள் இருப்பதாக அறிய முடியவில்லை. எனவே குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்படுகிறது.

3. தனியரின் கணவர் வாங்கிய கார் குறித்தான விவரத்தை உயர் அலுவலர்களுக்கு தெரிவிக்கவில்லை என சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிற்கு திருமதி.கலையரசி கொடுத்துள்ள விளக்கத்தில் தனது கணவர் திருமணத்திற்கு முன்பிருந்தே ஓட்டுனராகவும் கார் வாங்கி விற்கும் தொழிலை செய்து வந்ததாகவும், வாங்கப்பட்ட கார் தனது கணவரின் சொந்த வருமானத்தில் வாங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளதை ஏற்று குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்படுகிறார்.

4. குற்றச்சாட்டு எண்.1 முதல் 3 முடிய உள்ளதிலிருந்து விடுவிக்கப்படுவதால் இக் குற்றச்சாட்டிலிருந்தும் விடுவிக்கப்படுகிறார்.

## மாவட்ட ஆட்சித் தலைவரின் இறுதி ஆணை

முன்னாள் தே.கல்லுப்பட்டி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரும், தற்போது அ.வல்லாளப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருமான திருமதி.அ.கலையரசி என்பவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள், அவரது விளக்கம், விசாரணை அதிகாரியின் அறிக்கை, நேரடி விசாரணையின் பொழுது குற்றம் சாட்டப்பட்டவரால் வழங்கப்பட்ட விளக்கம் ஆகிய அனைத்து நிகழ்வுகளையும் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகிய நான் தன்னிச்சையாகவும், மிகுந்த கவனத்துடனும் பரிசீலனை செய்ததில் திருமதி.அ.கலையரசி என்பவர் அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்படுகிறார் என ஆணையிடுகிறேன்''.

15. மேலும், மனுதாரருக்கு கூடுதல் சந்தர்ப்பம் அளிக்கும் நோக்கில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் மதுரை மற்றும் தே.கல்லுப்பட்டி பேரூராட்சியின் செயல் அலுவலர் ஆகியோரால் முறை மன்ற நடுவத்தின் முன் அளிக்கப்பட்ட வாக்குமூலங்களின் நகல்களும் மனுதாரருக்கு அனுப்பி வைக்கப்பட்டு கருத்துக்கள் பெறப்பட்டன. மனுதாரரது 18.03.2016 நாளிட்ட கடிதத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரால் இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்ட அதே குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவும், கூடுதலாக சில குற்றச்சாட்டுகளையும், மேற்குறிப்பிட்ட அலுவலர்களது வாக்குமூலங்களை மறுத்தும் எழுதியுள்ளார்.

மேலும், திருமதி.கலையரசிக்கு பின்பு வந்த செயல் அலுவலர் திரு,.கா.கண்ணன் மீது, தான் எவ்வித ஊழல் குற்றச்சாட்டும் வைத்து யாரிடமும் புகார் அளிக்கவில்லை எனவும் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறவில்லை எனவும் இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், மனுதாரரது 06.12.2014 நாளிட்ட முறையீட்டில் முன்னுரையில் செயல் அலுவலர் திரு.கா.கண்ணன் என்பவரும் திருமதி.கலையரசி கடைப்பிடித்த முறையை பின்பற்றி அவரும் முறைகேடுகள் செய்து வருவதால் இருவர் மீதும் நடவடிக்கை எடுக்க கோரி அதிகாரிகளுக்கு முறைப்படி

மனுச் செய்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என குறிப்பிட்டுள்ளார். மேலும், அதே கடிதத்தில் பத்தி 7-ல் "செயல் அலுவலர் திரு.கா.கண்ணன் மீதுள்ள 17(ஆ) வின் குற்றச்சாட்டிற்கு எவ்வித பதிலும் அளிக்கவில்லை'' எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரரது 20.06.2011 நாளிட்ட மதுரை மாவட்ட ஆட்சி தலைவருக்கு முகவரியிட்ட கடிதத்திலும் "செயல் அலுவலர் திரு.கண்ணன் என்பவரும் பேரூராட்சித் தலைவர் மூன்று கவுன்சிலர்கள் மற்றும் அலுவலக ஊழியர்களின் துணையோடு முன்னாள் செயல் அலுவலர் திருமதி.கலையரசி செயல்பட்டது போல இவரும் நிர்வாகத்தை முறைகேடாக செயல்படுத்தி வருகிறாரெனவும் பஸ் நிலையத்தின் மேல்புறமுள்ள கடைகளில் மாடிப்படி அருகே உள்ள ஒரு பகுதியை கடையாக கட்டி திருமலை செல் சென்டர் கடையை நடத்தி வரும் உரிமையாளரிடம் டெண்டர் விடாமல் ரூ.65,000/- கையூட்டு பெற்றுள்ளார் என்றும் குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டுள்ளன.

ஆனால், மனுதாரர் தற்போது மேற்படி செயல் அலுவலர் திரு.கா.கண்ணன் மீது எவ்வித ஊழல் குற்றச்சாட்டும் புகாரும் தான் கூறவில்லை எனத் தெரிவித்திருப்பது முன்னுக்குப் பின் முரணாக உள்ளது. இந்நிலையில் மனுதாரர் குற்றச்சாட்டுக்கள் எழுப்பிய இருவரில் ஒருவரை மட்டும் விடுத்து திருமதி.கலையரசி மீதே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் குற்றச்சாட்டுகளில் இருந்து இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்ட நிலையிலும் புகாரினை வலியுறுத்தி வருவதால் புகாரின் உண்மைத் தன்மை குறித்து பரிசீலித்திட ஏதுவாக திரு.கண்ணன், செயல் அலுவலர் , பள்ளத்தூர் (முன்னாள் செயல் அலுவலர் , தே.கல்லுப்பட்டி ) அவர்கள் 29.04.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தின் முன் விசாரணைக்கு ஆஜராக தெரிவித்து 26.04.2016 நாளிட்ட அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டது.

16. அதன்படி திரு.கண்ணன், செயல் அலுவலர். 29.04.2016 அன்று ஆஜராகி தனது எழுத்து பூர்வமான வாக்குமூலத்தையும் தாக்கல் செய்தார். மேற்படி வாக்குமூலத்தில் பஸ் நிலைய வணிக வளாகத்தில் உள்ள மாடிப்படிக்கட்டிற்கு கீழ் உள்ள சிறிய காலியிடத்தை வாடகைக்கு விட்ட வகையில் முறைகேடு செய்ததாக தன் மீது மனுதாரர் மாவட்ட ஆட்சியரிடம் புகார் செய்திருந்ததாகவும் அது குறித்து உரிய விசாரணைகள் செய்யப்பட்டு, விதிமுறைகளுக்குட்பட்டு ஏல நவடிக்கைகள் நடைபெற்றது குறித்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன எனவும் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரது 15.01.2014-ம் நாளிட்ட ஆணையின்படி குற்றச்சாட்டுகளிலிருந்து தான் விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவித்து அதன் நகலினையும் சமர்ப்பித்தார்.

மேலும், அவர் தனது வாக்குமூலத்தில் முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.காமராஜ் அவர்கள் ஒருமுறை ஆய்விற்கு வந்தபோது மனுதாரர் குடியிருக்கும் 3வது வார்டு அங்கீகாரமற்ற மனைப்பகுதியில் சாலை வசதி செய்து தரக்கோரி பொதுமக்களுடன் மாவட்ட ஆட்சித் தலைவரை மறித்து மறியலில் ஈடுபட்டாரெனவும் மனுதாரர் கன்னியமற்ற முறையில் பேசியதால் அப்போதைய செயல் அலுவலர் திருமதி.கலையரசி மனுதாரரை தட்டிக் கேட்டதால் அது முதல் அவர் மீது தனிப்பட்ட விரோதத்தை ஏற்படுத்திக் கொண்டாரெனவும் மனுதாரர் அவரது செயல்பாடுகளால் அவரது துறையிலிருந்து கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டதாக அவரின் உறவினர் மூலம் தனக்கு தெரிய வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரர் தொடர்ந்து தொல்லை கொடுத்ததாலும், மனு கொடுத்ததாலும் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு மனையாக இருந்தபொழுதிலும் பேரூராட்சி மன்றத்திலும் மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களிடமும் உரிய அனுமதி பெற்று மனுதாரர் வசிக்கும் பகுதிக்கு சாலை அமைத்துக் கொடுத்ததாகவும் தெரிவித்துள்ளார். மேலும் பேரூராட்சிக்கு வரும்போது தன்னுடைய முன்னாள் காவல் துறை சார்ஆய்வாளர் என்ற பதவியை குறிப்பிட்டு மிரட்டல் தொனியில் பேசி வந்துள்ளார் என்பதையும் தெரிவித்துள்ளார்.

18.09.2015 அன்று நடைபெற்ற விசாரணையிலும் திரு.மா.குணசேகரன், மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரும் மனுதாரர் வசிக்கும் பகுதிக்கு சாலை வசதி செய்து கொடுப்பதில் ஏற்பட்ட காலதாமதத்தினால் ஏற்பட்ட வாக்கு வாதங்களினால் இதுபோன்ற நிகழ்வும், புகார்களும் எழுந்துள்ளன என அவரது வாக்குமூலத்தில் கூறப்பட்டது.

மேலும், மனுதாரர் மாவட்ட ஆட்சி தலைவரிடம் அளித்த 20.06.2011 நாளிட்ட மனுக்கள் (எண்.5015 மற்றும் 5016) மீதான விசாரணைகளின் அடிப்படையில் மதுரை, தனித்துணை ஆட்சியர் (சமப்பாடு திட்டம்) அவர்களால் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்ட விரிவான அறிக்கையும் இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டது. அதிலும் மனுதாரர் தனது தெருவிற்கு சாலை வசதி செய்து தரவில்லை என்ற ஆதங்கத்தில் மிகைப்படுத்தப்பட்ட புகார்களை தெரிவித்துள்ளார் எனத் தெரிகிறதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

17. மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரது நடவடிக்கைகள் ந.க.எண்.84302/11/பே.2 நாள்16.05.2014ன் படி எதிர்மனுதாரர் திருமதி.அ.கலையரசி என்பவர் மீதான குற்றச்சாட்டுகள், அவரது விளக்கம் , விசாரணை அதிகாரியின் அறிக்கை, நேரடி விசாரணையின்போது குற்றம் சாட்டப்பட்டவரால் வழங்கப்பட்ட விளக்கம் ஆகியவற்றை மாவட்ட ஆட்சித் தலைவரால் தன்னிச்சையாகவும் மிகுந்த கவனத்துடனும் பரிசீலனை செய்யப்பட்டு மேற்படி அலுவலர் அனைத்துக் குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டு தமிழ்நாடு குடிமைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு ) விதிகளின் படி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் நகலும் மனுதாரருக்கு கிடைக்கப் பெற்றதென தனது வாக்குமூலத்திலேயே ஒப்புக் கொண்டுள்ளார். இருப்பினும் தொடர்ந்து தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் அதே புகாரினை தெரிவிப்பதும், தகவல் கோருவதும் மேல்முறையீடு செய்வதும் என தொடர்ந்து மனு செய்வதை வழக்கமாக கொண்டுள்ளது தெரிய வருகிறது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தவகல் மட்டுமே கேட்டுப்பெறும் உரிமை உள்ளதென்பதையும் , பெறப்பட்ட தகவல் அடிப்படையில் புகார்கள், மேல்முறையீடுகள் கோரப்படும் குறைதீர் நடவடிக்கைகள் மற்றும் காணப்படும் முடிவுகள் எவ்வாறு தவறாக எடுக்கப்பட்டுள்ளன என எழுப்பும் விவாதங்கள் முதலியன அடங்காதென்பதையும், தரப்பட்ட தகவல்கள் ஏற்புடையதல்ல என செய்யப்படும் மேல்முறையீடுகள் அத்தகவலின் அடிப்படையை விவாதிக்கும் புகார்கள் அதனடிப்படையில் எழுப்பப்படும் கேள்விகள், குறைதீர் நடவடிக்கைகள் ஆகியவை தகவல் அறியும் உரிமை சட்டப்படி செய்ய இயலாதென்பதையும் மனுதாரருக்கு வலியுறுத்தப்படுகிறது.

18. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற சட்டம் பிரிவு 10 (3) (c)ன் படி, புகாரில் கூறப்படும் நிகழ்வு ஐந்தாண்டு காலத்திற்கு முற்பட்டதாயின் முறைமன்ற நடுவம் பரிசீலனைக்கு உகந்ததாக கருத இயலாது. இந்நிலையில் திருமதி.கலையரசி, செயல் அலுவலர், தே.கல்லுப்பட்டி அவர்களது 01.04.2008 முதல் 21.01.2010 வரையிலான காலத்திலான நிகழ்வுகள் குறித்து மனுதாரர் புகார்கள் / முறையீடுகள் செய்துள்ளார். இவை ஐந்தாண்டுகளுக்கு மேற்பட்டதாயிருப்பினும் அது போன்ற முறைகேடுகள் / நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக மனுதாரர் குறிப்பிட்டமையால் மேற்கண்டவாறு தொடர்புடைய அனைத்து ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டதுடன் அனைத்து தரப்பிற்குமான விசாரணை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலங்கள் பெறப்பட்டன.

19. மனுதாரரது ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் ஏற்புடையதல்ல எனவும். ஒரு ஓய்வு பெற்ற அரசு ஊழியர் ஒட்டு மொத்த அரசு நிர்வாக அமைப்புகளையும் அலுவலர்களையும் ஆதாரமின்றி அவதூறாக குற்றம் சுமத்துவது கண்டிக்கத்தக்க செயலாகும் என இம்முறை மன்றம் கருதுகிறது. மேலும் மனுதாரரது மேற்கண்ட முறையீடு இம்முறைமன்ற நடுவத்தின் பரிசீலனைக்கு உகந்ததல்ல எனவும் முடிவு செய்கிறது.

மனுதாரரது இக்கடிதமும் (28.05.2015) மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களின் பெயரிட்டே அனுப்பப்பட்டுள்ளது. மனுதாரர் ஒரு ஓய்வு பெற்ற அரசு அலுவலராக இருந்தும் மேதகு ஆளுநர், முறைமன்ற நடுவர் போன்றோருக்கு மனு அனுப்பும் போதும் அவர்களது பெயர்களையே குறிப்பிட்டு அனுப்புவது முறையானதல்ல என்பதை கவனத்தில் கொள்ளாமல் இருக்கும் அவரது போக்கு நடைமுறைக்கு முரணாக உள்ளது என்பது புலனாகிறது. மேலும், 25.04.2015 நாளிட்ட மனுதாரரது முறையீடு குறித்து இரு தரப்பு விசாரணை நடவடிக்கைகள் இம்முறைமன்ற நடுவத்தால் மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலங்கள் மற்றும் அறிக்கைகள் பெறப்பட்டு தற்போது இறுதி நிலையில் உள்ளது என்ற விவரம் 02.05.2016 நாளைய அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டதோடு மட்டுமல்லாது 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் விதி 4–ன் படி மனுதாரரது முறையீட்டினை உரிய படிவத்தில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்துடன் (ரூ.10/– மதிப்பிலான நீதிமன்ற வில்லையுடன்) முறையாக சமர்ப்பிக்குமாறு மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டு மேலும் கூடுதல் வாய்ப்பாக ஒரு வார கால அவகாசம் அளிக்கப்பட்டது படிவத்தின் நகலும் அனுப்பி வைக்கப்பட்டது. இருப்பினும், மனுதாரர் விதிகளின்படி முறையீட்டினை முறையாக தாக்கல் செய்ய தவறியுள்ளார்.

இவ்வாறு ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளையும் தன் வரம்பிற்கு மீறிய வகையில் அரசினால் இயற்றப்பட்ட சட்டத்தினை தேவையற்றது என விமர்சனம் செய்வது ஏற்புடையதல்ல என இம்முறை மன்ற நடுவம் மனுதாரருக்கு சுட்டிக் காட்டுகிறது. ஒரு ஓய்வு பெற்ற அரசு ஊழியரே தான் குற்றம் சாட்டிய நபர் உடனடியாக தண்டிக்கப்பட வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காக அரசு முதல் அனைத்து நிர்வாக அமைப்புகளையும் ஏளனமாகவும், அவதூறாகவும் குறிப்பிடுவது ஆணவப் போக்கினை வெளிப்படுத்துவதாகவும் கண்டனத்துக்குரிய செயலாகவும் அமையும் என்பதை கவனத்தில் கொள்ளப்பட வேண்டுமெனவும் இம்முறை மன்ற நடுவம் சுட்டிக் காட்டி ஆணையிடுகிறது. மேலும், ஒரு ஊழியர் அல்லது அலுவலர் தனது வரம்பிற்கு மீறிய வகையில் செயல்படுவது என்பது நன்னடத்தை மீறிய செயல் என்பதை

ஒரு வழக்கில் உச்ச நீதிமன்றம் தனது கீழ்கண்ட வார்த்தைகள் அடங்கிய ஆணைகள் மூலம் சுட்டிக்காட்டியுள்ளதையும் இம்முறைமன்ற நடுவம் குறிப்பிடுவது இந்நேர்வில் அவசியமானதென கருதுகிறது.

"....doing an Act beyond one's own authority itself amount to breach of discipline, trust and is a misconduct...."

திருமதி.கலையரசி எதிர்மனுதாரர் மற்றும் திரு.கண்ணன் ஆகியோரது வாக்குமூலங்களில் மனுதாரர் ஓய்வு பெற்ற சார்பு ஆய்வாளர் என்ற தோரணையில் அரசு அலுவலர்களை மிரட்டுவதை வாடிக்கையாகக் கொண்டவர் என்ற வாக்குமூலத்தினை ஒதுக்கிட இயலாது. தமிழ் நாடு மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் மீதான விசாரணைக்காக முறைமன்ற நடுவர் அமைப்பை ஏற்படுத்திட 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மூலம் வகை செய்யப்பட்டுள்ளது. அச்சட்டத்தின் கீழ் வகை செய்யப்பட்டுள்ள காரணங்களுக்காக மட்டுமே மேற்படி சட்டத்தின்கீழ் அரசினால் வெளியிடப்பட்டுள்ள தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (முறையீடுகள் தாக்கல் முறை, விசாரணை மற்றும் தீர்வு) விதிகள், 2015–ன்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள முறைகளின் படியும் உரிய படிவத்திலும் கட்டணத்துடனும் முறையீடுகள் தாக்கல் செய்யப்பட வேண்டும். ஆனால், சில நேர்வுகளில் மேற்குறிப்பிட்டவாறு விதிமுறைகளின் படி தாக்கல் செய்யப்படாமலும், தங்களது சுய விருப்பு வெறுப்பு நோக்கங்களுக்காகவும் அலுவலர்களை அல்லது தனக்கு வேண்டாதவரை மிரட்டுவதற்காகவும் இச்சட்டத்தின் கீழ் முறையீடு என செய்ய முனைவது இச்சட்டத்தின் தீர்வு வரம்பிற்குட்பட்டதாகாது என்பதோடு மேற்படி சட்டப்பிரிவு 8(2) ன் கீழ் அத்தகைய நிலை உறுதி செய்யப்பட்டு இம்முறை மன்ற நடுவம் சம்பந்தப்பட்டவருக்கு அபராதக் கட்டணம் நிர்ணயிக்க வேண்டிய நிலையும் எழுகிறது.

20. அனைத்து ஆவணங்கள், விசாரணைகள் மற்றும் வாக்குமூலங்களின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டன. எதிர்மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகள் முறையே தமிழ்நாடு குடிமைப்பணி விதிகளின்படி விசாரிக்கப்பட்டு இறுதி ஆணை மேல்முறையீட்டு அலுவலரான மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையிலும் தனித்துணை ஆட்சியரால் விசாரிக்கப்பட்டு

மிகைப்படுத்தப்பட்ட புகார்கள் என அறிக்கை அளித்துள்ள நிலையிலும் விசாரணைகள், வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலித்ததின் படி இம்முறையீடுகள் ஏற்கனவே விதிகளின் படி தீர்வு செய்யப்பட்டவை என்பதாலும் போதிய வாய்ப்புகள் அளித்தும் முறையீட்டினை முறையே விதிகளின்படி சமர்ப்பிக்கத் தவறிய நிலையிலும் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கத் தக்க அளவில் முறையான ஆதாரங்கள் ஏதும் முறையீட்டில் சமர்ப்பிக்கப்படாத நிலையிலும் மேல் நடவடிக்கைக்கு உகந்தவையல்ல என உத்தரவிடப்படுகிறது. மேலும் எந்த ஒரு மனுதாரரும் எதிர்மனுதாரர் மீதான புகாரை உரிய ஆதாரங்களோடு நிரூபிக்காமல் பழிவாங்க வேண்டும் என்ற தனிப்பட்ட விருப்பு வெறுப்புகட்கு சட்டங்களை துணைக்கு அழைத்துச் செல்வதை அனுமதிக்க முடியாது என்பதையும் சுட்டிக்காட்டி இம்முறை மன்றம் ஆணையிடுகிறது.

2016ஆம் ஆண்டு மே திங்கள் 30 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது

ஒம்/...
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பெ. பழனிவேல்
செயலாளருக்காக.

பெறுநர்.

1. திரு.ஆ.பெருமாள்.
காவல் சார்பு ஆய்வாளர் (ஓய்வு),
3.1.34.C, பாண்டியன் நகர்,
தே.கல்லுப்பட்டி, பேரையூர் வட்டம்,
மதுரை மாவட்டம் – 625 702

2. செயல் அலுவலர்,
தே.கல்லுப்பட்டி பேரூராட்சி,
தே,கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம் –625 702.

3. திரு.க.கண்ணன்,
செயல் அலுவலர்,
பள்ளத்தூர் பேரூராட்சி, சிவகங்கை மாவட்டம்–630 107.

4. மாவட்ட ஆட்சித்தலைவர், மதுரை மாவட்டம், மதுரை.
5. பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை–108
6. உதவி இயக்குநர், பேரூராட்சிகள், மதுரை
7. திருமதி. அ.கலையரசி,
செயல் அலுவலர்,
தே.கல்லுப்பட்டி,
மதுரை மாவட்டம். (உதவி பேரூராட்சி இயக்குநர் வழியாக
சார்வு செய்யும் பொருட்டு – 2 நகல்கள்)